# தேவனுடைய ஆவிக்குரிய வரங்களைப் பற்றி புரிந்து கொள்ளுங்கள்

ஆவிக்குரிய வரங்களை பயன்படுத்துவது பற்றிய அடிப்படை வழிகாட்டுதல்கள் பவுல்-தீமோத்தேயு தலைவர் பயிற்சி துணைப்பாடம் S6a யில் விவரிக்கப்பட்டுள்ளன. "உங்கள் சபைக்கு ஆவிக்குரிய வரங்கள் உண்டு." அந்தப் பாடத்தை நீங்கள் இதுவரை வாசிக்கவில்லை என்றால், இப்போது வாசிக்கவும்.

## 1. ஆவிக்குரிய வரங்களைப் பற்றி விவரிக்கும் வேதாகம வசனங்களை ஆராய்தல்



தேவன் எல்லா கிறிஸ்தவ விசுவாசிகளுக்கும், ஒருவருக்கொருவர் சேவை செய்வதற்காகத் தனித்திறமைகளைக் கொடுக்கிறார் என்பதை புதிய ஏற்பாட்டு நிரூபங்கள் வெளிப்படுத்துகின்றன. தேவன் சபைகளுக்கு இப்படிப்பட்ட சில மனிதர்களையும் அனுப்புகிறார்.

தேவன் விசுவாசிகளுக்கு அளிக்கும் இரண்டு வகையான அடிப்படை வரங்களை **1 பேதுரு 4:10 & 11 ல் காண்க:**

*"அவனவன் பெற்ற வரத்தின் படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபை உள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள். ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக் கடவன். ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன். எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக. அவருக்கே, மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக."*

*(பதில்): பேதுரு கூறிய இரண்டு அடிப்படையான செயல்பாடுகள் எவை எனில்:*

1. ***போதித்தல்** (தேவ சத்தியத்தைப் பிறருக்குக் கூறுதல்)*
2. ***சேவித்தல்** (தேவ அன்பை பிறருக்கு காட்டுதல்)*

விசுவாசிகளை வெவ்வேறு ஊழியங்களுக்காக திறப்படுத்துவதற்காக தேவன் அதற்கேற்றவர்களை சபைக்கு அளிக்கிறார் என்பதை எபே. 4:10-12 வெளிப்படுத்துகிறது. எபே. **4:11** ல் ஐந்து வகையான வரம் பெற்ற மக்களைக் காண்க:

*"பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்."*

*(பதில்: இந்த ஐந்து வகையான மனிதர்கள் கீழே பட்டியல் இடப்பட்டுள்ளன)*

1) **அப்போஸ்தலர்கள்** (சபைகளை ஸ்தாபிப்பவர்கள்)

2) **தீர்க்கதரிசிகள்:** (தேவ சத்தியத்தைப் பிரசங்கிப்பவர்கள்)

3) **சுவிசேஷகர்கள்** (நற்செய்தியை அறிவிப்பவர்கள்).

4) **மேய்ப்பர்கள்** (சபையை மேய்க்கும் ஆயர்கள்)

5) **போதகர்கள்** (கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியுமாறு பிறருக்கு உதவுபவர்கள்)

பிறருக்கு சரியான மனோபாவத்தோடு சேவை புரிவதற்காக விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய வரங்கள் உண்டு என்று ரோமர் 12 போதிக்கிறது.

*"நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்கள் உள்ளவர்கள் ஆனபடியால், நம்மில் தீர்க்கதரிசனம் சொல்லுகிற வரத்தை உடையவன் விசுவாசப் பிரமாணத்துக்கு ஏற்றதாக சொல்லக்கடவன். ஊழியம் செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்தி சொல்லுகிறவன் புத்தி சொல்லுகிறதிலும் தரித்திருக்கக் கடவன். பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனை*

*இல்லாமல் கொடுக்கக் கடவன். முதலாளியானவன் ஜாக்கிரதையாக இருக்கக் கடவன். இரக்கம் செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக் கடவன்."*

(பதில்: ஏழு வகையான வரங்கள் கீழே பட்டியல் இடப்பட்டுள்ளன)

1) **தீர்க்கதரிசனம்:** (ஒருவருக்கொருவர் தேவ சத்தியங்களைப் பேசுதல்: 1 கொரி. 14:3 & 24).

2) **சேவித்தல்:** (1 கொரி. 12:28 ல் 'உதவி' என்று அழைக்கப்படுகிறது

3) **போதனை** (விசுவாசிகள் ஒருவருக்கொருவர் சேவிக்க திறப்படுத்துதல்) (equip)

4) **புத்தி சொல்லுதல்:** (ஊக்கப்படுத்துதலும் திருத்துதலும்)

5) **தாராளமாய்க் கொடுத்தல்**

6) **ஜாக்கிரதையாய் வழிநடத்துதல்** (மந்தைகளையும் ஊழியங்களையும் ஸ்தாபித்து மேற்பார்வை செய்தல், விசுவாசிகளை ஒற்றுமையாக பணியாற்ற வைத்தல்)

7) **இரக்கம் செய்தல்** (உற்சாகத்துடன்)

வெவ்வேறு வரங்களையும் ஒரு சரீரத்தைப் போல ஒற்றுமையாக பயன்படுத்துவது எவ்வாறு என்று 1 கொரி 12 கூறுகிறது. **1 கொரி 12:8-10 & 28** ல் மேலே பட்டியலிடப்படாத வேறு வரங்களையும் கண்டுணர்க.

*"எப்படி எனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களை செய்யும் சக்தியும், வேறொருவனுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தலும், வெறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்கு பற்பல பாஷைகளைப் பேசுதலும், வெறொருவனுக்கு பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது" (1 கொரி. 12:8-10).*

*"தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்." (1 கொரி. 12:28).*

(பதில்கள்: **1 கொரி 12** ல் கூறப்படும் பிற ஆவிக்குரிய மற்றும் தீர்க்கதரிசன வரங்கள் இவைகளே:

- **ஞானத்தைப் போதிக்கும் வசனம்:** (தேவ சத்தியத்தை கைக்கொள்ளும்படி பிறருக்கு உதவுதல்)
- **அறிவை உணர்த்தும் வசனம்:** (தேவ சத்தியத்தை பிறர் அறிந்து கொள்ள உதவுதல்)
- **பாஷைகள்:** (ஜெபித்தல், பாடுதல், அறியாத மொழியில் தீர்க்கதரிசனம் சொல்லுதல்)
- **பாஷைகளை வியாக்கியானம் செய்தல்:** (பிறர் பேசுவதற்கு அர்த்தம் கூறுதல்)

1 கொரி. 12ல் உள்ள பிற ஆவிக்குரிய, சேவை செய்யும் வரங்களானவை:

- **விசுவாசம்:** (தேவன் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்ற உறுதியான நம்பிக்கை)
- **குணமாக்குதல்:** (நோயாளிகளை குணமாக்கும்படி தேவனிடம் ஜெபித்தல்)
- **அற்புதங்கள்:** (மக்களின் தேவைகளை தேவன் அளிக்குமாறு ஜெபித்தல்)
- **ஆவிகளைப்பகுத்தறிதல்:** (அசுத்த ஆவிகளையும் அவை உண்டாக்கும் கேடான ஆவிக்குரிய மாறுபாடுகளையும் கண்டறிதல்)
- **ஆளுகைகள்** (திட்டங்களை நிர்வாகித்தலும் விவரங்களை ஒருங்கிணைத்தலும்)

சில பேசும் மற்றும் சேவிக்கும் வரங்கள் இயல்புக்கு மாறானவைகளாய் இருக்கும். இவை, மக்களை, விசுவாசத்துக்குள் கொண்டு வரும் தேவ வல்லமையின் அடையாளங்களாகவும் விளங்கும்.

இந்த அடையாளங்களான வரங்களில் பாஷைகளும் (1 கொரி. 14:22), பாஷைகளை வியாக்கியானம் செய்தலும், குணமாக்குதலும், பல்வேறு அற்புதங்களும் அடங்கும்.

புதிய ஏற்பாட்டில் வெளிப்படையாக ஆவிக்குரிய வரங்கள் என்று இனம்காணப்பட வில்லை என்றாலும் சில ஆசிரியர்கள் பின்வருவனவற்றையும் வரங்களாகவே கருதுகின்றனர்:

- **அண்ணகர்** (கற்பு, திருமணம் செய்யாமல் இருப்பது. மத் 19:10).
- **திருமணம்** (1 கொரி. 7:7)
- **விருந்துபசரிப்பு** (ரோமர் 12:13)
- **தியாக மரணம்** (நற்செய்தியின் பொருட்டு கொல்லப்படும் வாய்ப்பை அளிக்கும் கிருபை, வெளி. 20:4)

முடிவாக, தேவனுடைய ஆவிக்குரிய வரங்களை நாம் மூன்று **பொது வகைகளாகப்** (general categories) பகுக்கலாம்.

- தேவ வார்த்தையைப் **பேச** விசுவாசிகளுக்கு உதவும் வரங்கள்.
- தேவ வல்லமையோடு **சேவை** செய்ய விசுவாசிகளுக்கு உதவும் வரங்கள்
- தேவனுடைய அற்புத வல்லமையை வெளிப்படுத்தி விசுவாசம் கொள்ள மக்களுக்கு உதவும் **அடையாள** வரங்கள்.

**சோதனை** (Test): கீழ்வரும் வரங்களை மேலே உள்ள மூன்று வகைகளின் படி இனம் காணுக:

1) போதனை

2) இரக்கம் காட்டுதல்

3) உதவிகள்

4) புத்திமதி

5) பாஷைகள்

6) விருந்துபசாரம்

(பதில்கள்: 1. பேசுதல், 2. சேவித்தல், 3. சேவித்தல், 4. பேசுதல், 5. அடையாளம் ( 1 கொரி. 14:22), 6. சேவித்தல்)

சில பிரத்தியேகமான சூழ்நிலைகளின் தேவையை சந்திக்க, தமது வார்த்தையில் கூறப்படாத கூடுதலான ஆவிக்குரிய வரங்களையும் தேவன் கொடுக்கக் கூடும்.

## 2. ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய பொதுவான கேள்விகளுக்கு பதில் அளிக்க ஆயத்தமாகுக:

உங்களுக்கு ஏற்கெனவே தெரிந்திராவிட்டால், உங்கள் வேதாகமத்தில் பின் வரும் கேள்விகளுக்கு பதிலைக் காண்க.

| பொதுவான கேள்விகளும் தவறான புரிந்து கொள்ளுதல்களும் | பதிலைக் காண்க |
|---|---|
| ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவனிடம் இருந்து பெற்ற ஒரு ஆவிக்குரிய வரம் உண்டா? | ரோமர் 12:6 |
| ஒரு விசுவாசிக்கு ஒன்றிற்கும் மேற்பட்ட வரங்கள் இருக்க முடியுமா? | அப். 6:3, 8, 10 |

| | |
|---|---|
| ஒரு விசுவாசிக்கு எந்த வரத்தை அளிக்க வேண்டும் என்று தேவன் தீர்மானிக்கிறார்? | 1 கொரி. 12:11 |
| கொரிந்தியருக்கு எழுதிய, அப்போஸ்தலராகிய பவுல் எல்லா விசுவாசிகளும் மறு பாஷையில் பேச வேண்டும் என்று எதிர்பார்த்தாரா? | 1 கொரி. 12:30 |
| மேலே பட்டியல் இடப்பட்டுள்ள வரங்கள் அல்லது நற்பேறுகளில் மூப்பர்களுக்கு தேவைப்படுவது எது? | 1 தீமோ. 3:2 |
| வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றும் போது, கண்காணிகளுக்குப் பெரும்பாலும் கிடைக்கக்கூடிய வரம் எது? | அப். 6:1-6 |
| மேலான வரங்களை நாம் நாட வேண்டுமா? | 1 கொரி. 12:31 |
| மேலான ஆவிக்குரிய வரங்களில், கொரிந்து சபை விசுவாசிகள் நாட வேண்டியது எது என்று பவுல் வலியுறுத்துகிறார்? | 1 கொரி. 14:1-4 |
| புதிய ஏற்பாட்டில், தீர்க்கதரிசனம் சொல்லுவதின் மும்மடங்கு பலனளிக்கும் நோக்கம் என்ன? | 1 கொரி. 14:3 |
| எந்த ஆவிக்குரிய வரங்களையும் விட முக்கியமானது எது? | 1 கொரி. 13 |

| | |
|---|---|
| (பதில்கள்:<br>1. ஆம்<br>2. ஆம்<br>3. அவரது பரிசுத்த ஆவியின் மூலமாய்<br>4. இல்லை<br>5. விருந்துபசாரமும் போதனையும் | 6. சேவித்தல் அல்லது உதவுதல்<br>7. ஆம்<br>8. தீர்க்கதரிசனம், பக்தி விருத்தி, புத்தி, ஆறுதல் உண்டாக்குமானால்<br>9. பக்திவிருத்தி, புத்தி சொல்லுதல், ஆறுதல் தருதல்<br>10. அன்பு |

### 3. வெவ்வேறு வகையான ஆவிக்குரிய வரங்களின் சிறப்பான நோக்கத்தை நிறைவேற்ற முனைதல்

எல்லா விசுவாசிகளுக்கும் தேவன் ஆவிக்குரிய வரங்களைத் தருகிறார். தங்களுக்குத் தரப்பட்டுள்ள ஆவிக்குரிய வரம் இன்னது என்று விசுவாசிகள் அறிந்தே இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. ஆனால், அதே நேரத்தில், ஒருவருக்கொருவர் அன்போடு சேவை செய்ய எல்லா விசுவாசிகளும் அறிந்திருக்க வேண்டியது என்பது அவசியமாகும் (ரோமர் 12). சில விசுவாசிகள் சபைகளில் பயிற்சியாளர்களாக இருக்கின்றனர். சிலர் தேவ வார்த்தையை சிறந்த முறையில் பேசுவார்கள். சிலர் மக்களின் நடைமுறைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய சேவை செய்வார்கள். சிலர் அற்புத அடையாளங்களைச் செய்வார்கள்.

#### A. ஒவ்வொரு வகையான வரத்திற்கும் பிரத்தியேகமான நோக்கம் உண்டு.

**பேசும் வரங்கள்:** ("தீர்க்கதரிசனம்") மக்கள் விசுவாசித்து கீழ்ப்படியும் பொருட்டு தேவ சத்தியத்தைப் பேசுதல்.

- **போதித்தல்:** தேவ வார்த்தைக்கு எவ்வாறு கீழ்ப்படிவது என்று மக்களுக்கு போதகர்கள் விளக்குவது.
- **புத்தி சொல்லுதல்:** புத்தி கூறுபவர்கள் மக்களை ஊக்கப்படுத்தி, பலப்படுத்தி, கட்டுகின்றனர்.

- **விசுவாசம்:** மக்களை முன்னோக்கி அழைத்துச் செல்ல; சபை என்ன செய்யவேண்டுமோ அதற்கு தேவன் செய்யும் உதவி பற்றிய விசுவாசத்தையும் தரிசனத்தையும் மற்றவர்களுக்கு ஊட்டி உத்வேகம் தருபவர்களே இந்த வரம் பெற்ற மக்கள்.

**சேவிக்கும் வரங்கள்:** ("ஊழியம்") தேவ வல்லமையினால் மக்களுக்கு இரக்கம் காட்டுதல் தாராளமாகக் கொடுத்தல்.

- பிறருடைய பொருட் தேவைகளை (material needs) சந்தித்தல்.
- **தலைமையும் ஆளுகையும்:** தலைவர்கள், மக்கள் ஒன்றிணைந்து பணியாற்ற உதவுகிறார்கள்.
- **இரக்கம் காட்டுதல்:** இரக்கம் உள்ளவர்கள் மற்றவர்களின் தேவைகளை நடைமுறையில் பூர்த்தி செய்கின்றனர். (meet the needs in a practical way).

**அடையாள வரங்கள்** (அற்புதங்கள்) விசுவாசத்தில் மக்கள் பலப்பட தேவ வல்லமையைக் காட்டுதல்.

- **ஆவிகளைப் பகுத்திறிதல்:** சத்தியத்தையும் தவறையும் பிரித்தறிதல்.
- **குணமாக்குதல்:** குணமாக்கும் வரமுடையவர்கள் மக்களுக்கு உடல் மற்றும் உள் ரீதியான ஆரோக்கியத்தைக் கொண்டு வருகின்றனர்.
- **பாஷைகளும் வியாக்கியானங்களும்.** சிலர் தாங்கள் அறியாத மொழியில் பேசி ஜெபிக்கின்றனர். இவர்கள் ஒரு கூட்டத்தில் பேசுவார்களேயாயின் பிறர் அதற்கு தெரிந்த மொழியில் வியாக்கியானம் செய்ய வேண்டும்.
- **தீர்க்கதரிசனம்:** பேசப்பட்டாலும், இது விசுவாசிகளுக்கு ஒர் அடையாளமே (1 கொரி.12:22).

### B. ஒவ்வொரு வகையான மனிதனும் செய்ய வேண்டிய வேலை உண்டு.

**பேசும் மனிதர்கள்**

- **தீர்க்கதரிசிகள்:** தீர்க்கதரிசன செய்திகள் மக்களை விசுவாசத்திற்குள் வழிநடத்துகின்றன.
- **சுவிசேஷகர்கள்:** இயேசுவைப் பற்றிய நற்செய்தியைக் கூறுகிறார்கள்.
- **போதகர்கள்:** இயேசுவின் கற்பனைகளுக்கு எவ்விதம் கீழ்ப்படிவது என்ற அறிவுரைகளைக் கூறுகின்றனர்.

**சேவை செய்யும் மனிதர்கள்**

- **அப்போஸ்தலர்கள்:** பிற இடங்களுக்கு சென்று சபைகளை ஸ்தாபித்து தலைவர்களை பயிற்றுவிக்க அனுப்பப்படுகிறார்கள்.
- **மேய்ப்பர்கள்:** சபைகளையும் குழுக்களையும் வழிநடத்தி போஷிக்கின்றனர்.

### C. ஒவ்வொரு விசுவாசியும் தங்கள் வரங்களை உபயோகிக்கத் தலைவர்கள் உதவி செய்ய வேண்டும்.

சிறு குழுக்களில் மக்கள் ஒருவருக்கொருவர் சேவை செய்யும் போது, ஆவிக்குரிய வரங்கள் வெளிப்படையாக தெரிய வருவதால், பிறர் அதை அறிந்து கொள்ளுவார்கள். புதிய விசுவாசிகள் சேவை செய்வதைத் தடுக்க வேண்டாம்.

ஒருவருக்கொருவர் உதவி செய்வதில் தங்கள் ஆவிக்குரிய வரங்களை எல்லா விசுவாசிகளும் உபயோகிக்க வாய்ப்புகளை வழங்குங்கள். இதை சிறு குழுக்களில் சிறப்பாகச் செய்ய முடியும். சில திறமை பெற்ற மக்கள் பேசுவதை மட்டும் கேட்டுக் கொண்டு இருந்து, பரிசுத்த ஆவியானவரின் கிரியையை மட்டுப்படுத்தி விட வேண்டாம்.

ஆவிக்குரிய வரங்களை பயன்படுத்தும் போது பிறரிடத்தில் அன்பு கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதை அடிக்கடி ஞாபகப்படுத்தவும். விசுவாசிகள் அன்பற்றவர்களாகவும் கோபம் கொண்டவர்களாகவும் இருக்கும்போது பிறருக்கு அவர்களுடைய வரங்கள் துன்பம் விளைவிக்கும்.

தங்களுக்குள்ள ஆவிக்குரிய வரத்தின் படியே மக்கள் சபைகளிலும் சிறுகுழுக்களிடம் அலுவர்களையும் ஊழியங்களையும் பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்கேற்ற வரம் பெறாத ஊழியங்களில் வரம்பெற்ற வேறு மக்களை ஈடுபடுத்த வேண்டும்.

மூப்பர்களுக்குப் பேசும் வரமும் கண்காணிகளுக்கு சேவிக்கும் வரமும் தேவை. சிறு குழுக்களிலும், ஊழியக்குகுழுக்களிலும் பல்வேறு வரங்களைக் கொண்ட உறுப்பினர்கள் இருக்க வேண்டும். இவற்றை பரிசுத்த ஆவியானவர் ஒருமைப்படுத்துவார். ஒரே வரம் உள்ளவர்களை ஒரே குழுவில் போடுவதைத் தவிர்க்க வேண்டும்.

தங்களுக்கு தேவன் தந்துள்ள வரம் எது என்று விசுவாசிகள் எவ்வாறு அறிந்து கொள்வது. தேவ வரங்களைப் பெற்று முன் உதாரணங்களாகத் திகழும் வேதாகம கதாபாத்திரங்களை (characters) அவர்கள் தங்களோடு ஒப்பிட்டு நோக்க வேண்டும். வேதாகமத்தில் வரும் எந்த கதா பாத்திரத்தின் திறமைகளையும், நற்பண்புகளையும் ஒரு விசுவாசி தானும் வெளிப்படுத்த விரும்புகிறார் என்பதை இனம்காண அவருக்கு உதவுங்கள். அவர்களைப் பற்றிய கதைகளை விசுவாசிகளுக்குக் கூறுங்கள். எந்த பாத்திரத்தில் தங்களை இனம்காண முடிகிறது என்று கேளுங்கள். காரணம் என்ன என்றும் கேளுங்கள். இதோ சில உதாரணங்கள்.

### வேத முன் உதாரணங்கள்

**சேவை செய்.** நெகேமியா அதிகாரம் 3 மற்றும் 6:13-16 எருசலேம் மதிலைக் கட்ட திரண்டவர்களைப் போல (அவர்களில் உங்களை வலிமையாக இனம்காண முடிகிறதா)?

**கொடு.** அபிகாயிலைப் போல, தாராளமாக, பசியாய் இருந்த தாவீதின் மனிதர்களுக்கு, 1 சாமு.25. (கொடுத்தலைப்பற்றிய வழிகாட்டுதலை 1 கொரி. 9 ல் காண்க)

**புத்திகூறுதல்:** எபேசு சபை மூப்பர்களுக்கு பவுல் செய்தது போல. அப்.20:17-38.

**இரக்கம் காட்டுதல்:** லூக்.10:30-35ல் நல்ல சமாரியன் செய்தது போல. இந்த வரத்தை உபயோகிப்பது பற்றிய வழிகாட்டுதலுக்கு மத்.25:31-46 & அப்.6:1-7.

**தீர்க்கதரிசனம்,** தேவ மக்களை திரும்பும்படி அழைத்த எரேமியாவின் உணர்ச்சியூட்டும் பிரசங்கங்கள். எரே.1. இந்த வரத்தின் நோக்கத்தைப் பற்றி புதிய ஏற்பாடு 1 கொரி.14:3-4ல் காண்க.

**போதனை:** நெகே.8ல் எஸ்ரா தேவ பிரமாணங்களை மக்களுக்கு விளக்கியது போல போதித்தலில் உண்மையான நோக்கத்தை எபே. 4:11-16ல் காண்க.

**வழிநடத்துதல்** (பணியாளர் தலைமை) மற்ற ஊழியர்களுக்கு மோசே உதவியது போலவும், யோசுவா தன் இராணுவத்தை வழிநடத்தியது போலவும்: யாத்.18:13-26, யோசுவா 4-6.

**ஞானமாக ஆலோசனை கூறுதல்,** சாலொமோன் செய்தது போல. 1 இராஜா 3.

**அறிவு:** மதிலை ஆராய்ந்த பின் நெகேமியா செயல்பட்டது போலவும், பெரோயா பட்டிணத்தார் வார்த்தையை ஆராய்ந்தது போலவும், உண்மைகளின் அடிப்படையில் செயல்படுதல், நெகே.1:11-20, அப்.17:10-12.

**உதவி:** பவுலுக்கும் அப்பொலலோவுக்கும் ஆக்கில்லா பிரிஸ்கில்லா செய்தது போல (அப்.18:1-5, 24-28).

**அப்போஸ்தலராக செல்லுதல்:** (அனுப்பப்பட்டவர் அல்லது மிஷனரி) தண்ணீருக்கு அடியில் பயிற்சி எடுத்துக் கொண்ட யோனாவைப் போல. அதுபோல பவுலும் பர்னபாவும் (அப்.13-14). ரோமர் 5-20-21ல் பவுலின் முக்கியமான வழிகாட்டும் ஊழியக் கொள்கைளைக் காண்க.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net